முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1013

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவணஜோதியே நமோ நம

08.07.2022, வெள்ளிக்கிழமை

1. தர்மசக்தியே அரங்கா வாழ்க
   தரணிகாத்திடும் தேசிகா வாழ்க
   கர்மவினை போக்கி உலகோரை காக்க
   கருணைவடிவாய் வந்த குருராஜனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
   தாழ்விலா சுபகிருது மிதுன திங்கள்
   (சுபகிருது வருடம் ஆனி மாதம் 24 நாள், 08.07.2022 வெள்ளிக்கிழமை)
   தக்கதொரு அரங்கன் சக்திகூட எடுத்துரைப்பேன்
3. உரைக்கவே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
   ஊழகற்றும் அரங்கனே கலியின் சிறந்த குரு
   குருமார்க்கம் உலகோர் பின்பற்றி
   குறையிலா ஞான வழிகளில் வர
4. திரு அருள் பெற்று உலகோர் யாவரும்
   தேசிகன் வழி ஞானிகளாக உருமாற்றம் பெறுவர்
   மாற்றம் தரும் மகா சக்தி அரங்கன்
   மக்களை மீட்கும் ஞான யோகி குருராஜன்
5. அரசனே கலியிடரை வெல்லும்
   ஆற்றல்மிக்க ஆறுமுகன் என் சூட்சுமமாகும்
   வரமென அரங்கனை தொடர்ந்து வந்து
   வையகத்தார் ஞானம் பயின்றால்
6. ஞான ஆட்சிக் காலம்
   அரங்கனால் சடுதி அமையும்
   ஞானவான்களாக உலகமெங்கும் பரவி
   ஞான சித்தர் ஆட்சிக்காலமும் உதயமாகும்
7. ஆகவே அரங்கன் வழிவர
   அகிலத்தை ஆறுமுகன் யான்
   ஆற்றி அற்புதம் நிகழ்த்துவேன்
   ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–